249—

பரமக்குடியில் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் காய்கறித் தோட்டம் ஏற்படுத்துதல்.

***20383—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், பரமக்குடியில் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் காய்கறித் தோட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு திட்டம் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உழவர் பயிற்சி நிலையம் 19 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் 5 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. இங்கு பழப்பண்ணையும் இருக்கிறது. வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்தில் குறைந்த நீர்வளம் உள்ள இம்மாவட்டத்தில் காய்கறி தோட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், அந்தக் காய்கறி தோட்டக் கலையில் மகளிருக்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, டானிடா திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே தோட்டக்கலைக்கு பயிற்சி கொடுக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாவட்டத்தில் 1.20 லட்சம் செலவில் பழ மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் 200 ஏக்கர் பரப்பளவில் பழக்கன்றுகள் 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. அரசு தோட்டக் கலை பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 6.50 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. பழப்பயிர் சாகுபடிக்கு வேண்டிய கடன் உதவியும் 25 முதல் 50 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. இவைகள் எல்லாம் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பெற்று காய்கறித் தோட்டங்கள் அமைப்பதற்கும், பழத் தோட்டங்கள் அமைப்பதற்கும் முன்வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மகளிருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் காரணமாகத்தான் 1991-92–ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 450 கிலோ அரிசி உற்பத்தி, 1992-93–ல் ஆயிரம் கிலோ அரிசியாகவும், 1993-94–ல் அந்த உற்பத்தி 1500 கிலோவாகவும் அதிகரித்து உள்ளது. வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்தில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வேளாண்மைத் துறை மூலம் என்னென்ன திட்டங்கள் உள்ளன; இதில் தோட்டக் கலைக்கு சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு பல்வேறு திட்டங்களை தமிழக அரசு இன்றைக்கு செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்களின் வாயிலாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அளவு அரிசி உற்பத்தி அந்த மாவட்டத்தில் கூடியிருக்கிறது. பல்வேறு திட்டங்கள் அந்த மாவட்டத்தில் செயல்படுத்தி வந்தாலும், இந்த ஆண்டு முதல் பழைய இராமநாதபுரம் என்று சொல்லக்கூடிய இராமநாதபுரம் மாவட்டம், காமராசர் மாவட்டம் மற்றும் பசும்பொன் மாவட்டம் என்று சொல்லக் கூடிய இந்த மூன்று மாவட்டங்களையும் உள் அடக்கி நீர்ப்பிடி முகடு என்ற திட்டத்தின்கீழ் 28 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தை இந்த ஆண்டு துவக்குவதற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250. திரு.டி. சுதர்சனம், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

250—

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அரசு அளிக்கும் சலுகைகளின் விவரம்.

*10654—திரு.டி. சுதர்சனம்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு அறிவித்த செஸ் வரி, எக்சைஸ் வரி ரத்து சலுகை மூலம் கிடைக்கும் உபரித் தொகையினை கரும்பு உற்பத்தியாளர்களுக்குத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?